
# தமிழீழ விடுதலைப் புலிகள்



# தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின்
# தேசிய விடுதலைப் போராட்டம்

அன்புத் தோழர்களே!

இந்த அரசியல் வெளியீடு இலங்கையில் குமுறியுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும், இவ்விடுதலைப் போரை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லும் இலக்கில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் சமுதாயப் (சோசலிச) புரட்சிப் பாதையைப் பற்றியும், இரத்தினச் சுருக்கமாக எடுத்தியம்புகிறது.

இவ்வியக்கம், மக்கள் விடுதலை எழுச்சியின் புரட்சி மையம். படைக்கலப் புரட்சியில் அசைக்க முடியாத நம்பிக்கை ஒடுக்கு முறையை உடைத்தெறியும் உரமான உறுதி, தமிழ் ஈழ விடுதலையில் தணியாத பற்று, அறிவியல் சமுதாய (சோசலிச) அரசியற் பாதையில் அசையாத நம்பிக்கை, இப்படியான புரட்சிக் குறிக்கோட் பற்றினால், விடுதலையியக்கம் என்ற முறையில் போராடும் மக்கள் ஒருங்கிணைந்த வலுவாக, உண்மையான புரட்சி உட்கருவாகத் தங்களுக்குள் கடுமையான கட்டுப் பாடுகளை வைத்துக் கட்டுப்கோப்புடன் இயங்கி வருகிறார்கள். மார்க்சிசத்தின் மேதை லெனினின் கூற்றுப்படி, "இவ்வியக்கம் தேசிய அடக்குமுறையின் உச்சக்கட்டத்தில் மக்களின் உறுதியான ஒருங்கிணைந்த வலுவாகத் திரண்டெழுந்து, சிங்கள அடக்கு முறையின் மேலாதிக்க அரசியந்திரத்தைப் படைக்கலப் புரட்சி மூலம் தகர்த்தெறியும்" புரட்சி அரசியல் நடைமுறையின் உயர்விளக்கமாகும். இப்புரட்சி இயக்கத்தின் வரலாற்றுக் கால வழிகளைப் பற்றியும், அதன் படைத்துறைப் போராட்டக் கொள்கை முறைகளைப் பற்றியும், தமிழ் ஈழ மக்களின் தன்னுரிமையைப் பற்றியும், வரலாற்றுச் சுருக்கத்துடன் இங்கு அறிமுகப் படுத்துகிறோம்.

### அரசியற் பின்னணி:

இன்றைய இலங்கையில் உறைகின்ற இரண்டு தேசிய இனங்களில் ஒன்றான தமிழ்த் தேசிய இனத்தின் சிக்கல், சிங்கள வல்லாண்மையாளர்களால் (ஏகாதிபத்திய வாதிகளால்) உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, குமுறுகின்ற எரிமலையையொத்த கொந்தளிக்கும் அரசியற் சிக்கலாக உருவெடுத்து நிற்கின்றது. தமிழீழத் தேசிய இனமானது, ஒருங்கிணைந்து ஒரேயணியாய்த்திரண்டு தேசிய-விடுதலை கோருகிறது. ஒரு தேசிய இனத்தின் தூய உரிமை, அனைத்துலக குடியரசுக் கொள்கையின் அடிப் படையில், அதாவது, தாங்களாகச் செயற்படும் உரிமையின் அடிப்படையில், உரிமையுடன் பிரிந்து சென்று, தன்னுரிமை அரசமைக்கத் தமிழீழம் முழுவதும், சிறப்பாகப் பாட்டாளி-வர்க்கமும் ஒருங் கிணைந்து போராடி வருகிறார்கள். கடந்த முப்பது ஆண்டுக் காலமாக, மாறிமாறி அரசைக் கைப்பற்றும் சிங்கள இனவாத ஆளும் வகுப்பினர், கட்டவிழ்த்து விட்ட மிகக் கொடூரமான, கொடிய காட்டு விலங்காண்டித் தனமான ஒடுக்கு முறையின் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள் தவிர்க்க முடியாத தனி நாடு அரசியற் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டார்கள். நேர்மையான மாந்த அடிப்படை உரிமைக் காகப் பல்லாண்டுக் கால அமைதிப் போராட்டங்களெல்லாம் மிகக் கொடூரமான முறையில் அரச முப்படைகளால் நசுக்கப்பட்டன. ஈற்றில், ஒடுக்கு முறையின் அழுத்தம் அதிகரித்ததால் இரு தேசிய

இனங்கள் மத்தியில் பெரியதொரு முரண்பாடு எழுந்தது. இம்முரண்பாட்டின் குமுறலாய், ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனம் பிரிந்து சென்று தன்னுரிமை அரசமைக்கும் தவிர்க்க முடியாத அரசியற் பாதைக்குத் தள்ளப்பட்டது. தமிழ்த் தேசிய இனம் என்னும்போது இசுலாமிய, கிருத்தவ, சைவ மதங்களைத் தழுவிய தமிழ்ப்பேசும் மக்களையும் மதச் சார்பற்ற தமிழ் பேசும் மக்களையும் குறிக்கின்றோம். வரலாற்று ரீதியாகவும், மொழி ரீதியாகவும், பூகோள ரீதியாகவும், தமிழீழ தேசிய அமைப்பில் இம்மக்கள் இணைபிரியாத அங்கமாய் அமைந்துள்ளனர்.

## இரு தேசிய இனங்கள்:

"இலங்கை" என்றழைக்கப்பட்ட இத்தீவானது தமிழ் ஈழம், சிறீலங்கா, ஆகிய இரண்டு நாடுகளின் பண்பாட்டுத் தாயகமாகவும், இருவேறுபட்ட சமுதாயப் பண்பாட்டு மொழியமைப்புடைய தாகவும் தங்களுக்கென்ற வரலாற்றுச் சிறப்புடனும் இருந்து வந்தது. சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே, சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்பிருந்தே, ஆதி திராவிடத் தமிழர் இத்தீவில் பண்பாட்டுச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். கி.மு. 6-ம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து, நாடு கடத்தப்பட்டு இங்கு வந்து குடியேறுவதற்கு ஆதித்தமிழரால் அனுமதிக்கப்பட்ட மக்கள், காலப் போக்கில் திரிபடைந்து 'சிங்களவர்' எனப்பெயர் பெற்றுத் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

சிங்கள வரலாற்றுப் பேழைகளான "மகாவம்சம்", "குலவம்சம்" ஆகியன, கழிந்த கால அரசியற் குழப்ப நிலைகளையும், அரசியல் ஆதிக்கப் போட்டியினால் தமிழ்-சிங்கள மன்னர்கட்கிடையே நடந்த வன்முறைப் போராட்டங்களைப் பற்றியும், அரசு மாற்றங்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. கி.பி. 16-ம் நூற்றாண்டில், போர்த்துக்கேய காலனித்துவ ஆதிக்கம் ஊடுருவுகின்றவரை தமிழ் ஈழம் ஒரு கட்டுக்கோப்பான தேசிய அமைப்பாக, தமிழரசர்களால் ஆளப்பட்டு வந்தது. போர்த்துக்கேயர் தமிழ் ஈழத்தைக் கைப்பற்றிய போதும், அதனை ஒரு தனித்துவமான தேசிய அமைப்பாக, தமிழ்ப்பேசும் மக்களின் தாய்ப் பூமியாக ஆண்டு வந்தனர். தொடர்ந்து ஆண்ட டச்சுஅரசுக் கொள்கைகூடத் தமிழ்நில ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கவில்லை. கி.பி. 19-ம் நூற்றாண்டில் வந்த பிரித்தானிய மேலாதிக்கம் (ஏகாதிபத்தியம்) இரு வேறுபட்ட தேசிய இனங்களை வலுக்கட்டாயமாகத் தமது நிர்வாக வசதிக்காக ஒருங்கிணைத்து இன்றைய அரசியற் சிக்கலுக்கு கால்கோளிட்டது.

## தேசிய ஒடுக்கு முறையின் வேகம்:

1948-ம் ஆண்டு தேசிய தன்னுரிமை என்னும் பேரில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பு, சிங்கள தேசிய முதலாளித்துவக் கும்பலின் கைகளில் தவழ்ந்த பின்பு, சிங்கள இனவாத ஒடுக்கு முறைகளைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். இச்சிங்கள இனவாதக் கொள்கைத் திட்டத்திற்கு முதன் முதலாய்ப் பலியாகியது மலைவாழ் தமிழ்த் தோட்டப் பாட்டாளி வர்க்கமாகும். 1948-ம், 1949-ம், ஆண்டுகளிற் கொண்டு வரப்பட்ட இருபெரும் அநாகரிகச் சட்டத்தின் மூலம், பத்து இலக்கம் தமிழ்த் தோட்டத் தொழிலாள மக்களின் குடியுரிமை, வாக்குரிமை ஆகிய இரண்டையும் விழுங்கி மனித உரிமைக்குச் சாவு மணியடித்து, அவர்களை நாடற்றவர் என்ற நிலைக்குத் தள்ளியது. எல்லோராலும் வெறுக்கப்படும் மாந்தத் தன்மையற்ற இச்சட்டம், தேசிய-அடக்கு முறையின் முப்பதாண்டுக் கால வரலாற்றின் தொடக்க நிலையைக் குறிக்கிறது. இத் திட்டமிடப்பட்ட அடக்கு முறையின் மூலம்

தமிழின மக்களின் சமுதாய, அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையினைக் குழிதோண்டிப் புதைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஒடுக்கு முறையால் பல வடிவங்களில், பல கோணங்களில் நம் மக்களின் சமுதாய நிலைகளின்மீது ஊடுருவல் செய்யப்பட்டது. சிங்களவர்கள் தமிழீழ நிலத்தைச் சிறிது சிறிதாகத் தங்களுடன் இணைத்துக் கொள்வதற்கும், சிங்கள மொழி தமிழர்கள்மீது கட்டாயத்தின் மூலம் திணிக்கப்படுவதற்கும், கல்வி, வேலைவாய்ப்புப் போன்ற துறைகளில் அறமற்ற செயல்களால் தமிழ் இளைஞர்களைப் புறக்கணிப்பதற்கும், தமிழ் நிலத்தின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அமுக்கித் தடுப்பதற்கும், இந்த இனவாத சிங்கள அரசு அச்சட்டத்தை உருவாக்கி, இன்றுள்ள தேசிய இனச் சிக்கலுக்கு வழி வகுத்தது. குறிப்பாக 1958-லும், 1977-லும் கொண்டு வரப்பட்ட மிகவும் காட்டு விலங்காண்டித் தனமான இன வெறிக்கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீக்கிரையிடல், சூறையாடல், மாந்த இன அழிப்பு போன்ற பயங்கரமான கொடிய செயல்களைத் தமிழ்மக்களின்மீது கட்டவிழ்த்து, வன்முறைக் கொடியவர்களுக்கு அரசு துணைநின்றது. இத்தகைய இன அழிப்புப் படுகொலைகளினால் ஒரே நாடாக இருக்க விரும்பாமல் அரசியல், பொருளாதார, சமுதாய பிரிவிற்கான சூழல்களைத் தமிழ் பேசும் மக்களுக்கு, ஆழமாக, ஆதாரத்துடன் உணர வைத்தது.

### அரசியல் தன்னுரிமைப் போராட்டம்:

நாடளாவிய சிங்கள அடக்கு முறையினால் அரசியல் தன்னுரிமைப் போராட்டத்திற்கு மாற்று வழி தவிர்க்க முடியாததாய், தமிழீழ அரசியற் கட்சிகள் ஒரியக்கமாக இணைந்து, 1972-ம் ஆண்டு "தமிழர் விடுதலைக் கூட்டணி"யை அமைத்துக் கொண்டன. நாடு தழுவிய மலை போன்ற ஒடுக்கு முறையை எதிர்த்து, மாந்த அடிப்படை உரிமைகளைக் கேட்டு, அரசியற் போராட்டங்களினால் தோல்விகளை ஏற்று ஏமாற்றமடைந்த தமிழ்த் தேசிய இயக்கத்தினர், தன்னம்பிக்கை உறுதியில் அரசியல் விடுதலை வேண்டிப் போரிடுவதென முடிவு செய்தனர். அண்மையில் நடந்த தேர்தலில், தமிழ்ப்பேசும் மக்கள் அளித்த வெற்றியின் பயனாக, தனியே பிரிந்து சென்று தன்னுரிமை அரசமைக்கத் தலையாய முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாறு நாடு தழுவிய தாங்கொணா ஒடுக்குமுறையும், தேசிய முரண்நிலையின் அவசரமும், அதாவது இப் பெருத்த வேறுபாடும் தவிர்க்க முடியாத அரசியல் முடிவும் தன்னாட்சி அமைப்புக்கு அழைத்துச்சென்று, நாட்டின் தன்னுரிமைக்குப் புதிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த புரட்சி முறைப் போராட்டத்தைத் துவக்கியது. இத் தன்னுரிமைக் கோரிக்கையானது, இலங்கையின் அரசியல் வரலாற்றில், குறிப்பாகத் தமிழ் அரசியலில் புரட்சிகரமான ஒரு புதிய ஆண்டைத் தொடக்கியது. அதாவது, கால் நூற்றாண்டுக் காலமாக மொழிப் பிரச்சினையாக, சிறுபான்மையினப் பிரச்சினையாக இழுபட்டு வந்த தமிழர் பிரச்சனை, ஒரு தேசிய இனப்பிரச்சினையாக உருவம் பெற்று, சுயநிர்ணய-உரிமைப் பிரச்சினையாகத் திருப்பம் பெற்று, ஒரு தேசிய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டமான அமைப்பைப் பெற்றது.

### தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தோற்றம்; நோக்கம்; குறியிலக்கு:

சிங்கள இனவெறியர்களின் அடக்கு முறையினால் வரலாற்று அடிப்படையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தோன்றினர். தேசிய சிக்கல்களின் முரண்பாடுகளினால் புரட்சிச் சூழலில் இவ்வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது. தேசிய வன்முறையை எதிர்த்து உரம் மிக்க இளைஞர்களால் நிறுவப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் இதயக் குமுறல்களினால் ஏற்பட்ட தீக்குழம்பாக இவ்வியக்கம் உருவெடுத்தது.

தன்னுரிமை வேட்கையின் பயனாக ஏற்பட்டது. சிங்கள காவற்படையினர், அரசியல் நடவடிக்கைகளின் பொருட்டு, காட்டுத்தனத் துன்புறுத்தலை மேற்கொண்டதற்காக, நெஞ்சுரம் வாய்ந்த தமிழ் இளைஞர்கள் தங்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க, தாங்கொணு வன்முறையை எதிர்க்கத் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர். முதலாளித்துவத்தின் அதிகார அமைப்பான பாராளுமன்றமும் அதன் பழைமையான நடுத்தர வர்க்க மக்களாட்சிக் கோட்பாடும், தேசிய இனப்பிரச்சினை பற்றியோ, அல்லது சுயநிர்ணய உரிமை பற்றியோ, தெளிவான நிலையைக் கொண்டிருக்காததாலும், முதலாளித்துவத்தின் வெறியாட்டத்திலிருந்தே தேசிய இன ஒடுக்குமுறை பிறப்பதால், முதலாளித்துவ அரசானது ஒடுக்கப்படும் இனத்தின் சமூக, பொருளாதார அரசியற் கொந்தளிப்பின் பிறப்பை உண்மையாக, நீதியாக அணுகும் அக்கறையோ, ஆற்றலோ அற்றதாலும், தமிழ் ஈழத் தேசிய இனத்தின் விடுதலையை வென்றெடுக்க அமைதிவழிப் போராட்டங்கள் பயனளிக்காததாலும், பயனளிக்க மாட்டாதென நம்பியதாலும், இப்புரட்சிகர நடவடிக்கை தேவைப்பட்டதாலும் 1974-ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புடன் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

நாம் முக்கியத்துவமளிக்கும் மார்க்சிச, லெனினிசச் சித்தாந்தத்தின்படி, ஒடுக்கப்படும் மக்களின் குமுறல்களாகவே, தேசிய இனச்சிக்கலும், தேசிய விடுதலைப் போராட்டமான அதன் எழுச்சியும் கருதப்படுகின்றன.

தமிழ் ஈழ விடுதலைக்கு அரசியல் அமைப்புக்கு உட்படுத்தப்பட்டுத் தலைமை தாங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி நடாத்தும் அமைதி வழிப் போராட்டங்களுக்கும் எமது ஆதரவு நிச்சயமாக இருக்கும்.

"ஒடுக்கப்படும் ஓர் இனத்தின் பழைமை வாத நடுத்தர வர்க்கத்தினர் ஒடுக்குவோருக்கு எதிராகப் போராடினால், நாம் எப்பொழுதும், எச்சந்தர்ப்பத்திலும் மற்றவர்களைவிட அதைப் பலமாக ஆதரிப்போம். ஏனென்றால், நாம் ஒடுக்கு முறையின் தீவிரமான உறுதி கொண்ட எதிரிகள்".

—வி. ஐ. லெனின்.

ஆனால், ஒடுக்கப்படும் வர்க்கத்தின் பழைமைவாத நடுத்தர வர்க்க அரசியற் தலைவர்கள், தொழிலாள வர்க்கத்தை ஏமாற்றும் நோக்குடன் தேசிய விடுதலை வாசகங்களைத் திரும்பத்திரும்ப எழுப்புவதுடன் மட்டும் நிறுத்திக்கொண்டு, ஒடுக்கும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்கான ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கு இவ் வாசகங்களைப் பயன்படுத்துவார்களேயானால், இவர்களும் சிங்கள அதிதீவிர தேசிய வாதிகளுடன் இணைக்கப்பட்டு இன எதிரிகளாகக் கருதப் படுவார்கள்.

"ஒரு குறிப்பிட்ட கோரிக்கை எந்த அளவிற்குச் **சாத்தியமாகும்** என்பதில் தான் பழைமைவாத நடுத்தர வர்க்கத்தினர் மிக அக்கறை கொண்டிருப்பார்கள். ஏனெனில், அவர்கள் பாட்டாளி வர்க்கத்திற்குப் பாதகமான முறையில் மற்றைய தேசிய இனத்தைச் சேர்ந்த முதலாளி வர்க்கத்துடன் உடன்பாடு செய்து கொள்ளும் மாற்றமுடியாத கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை முக்கியமானது என்னவென்றால், பழைமைவாத நடுத்தர வர்க்கங்களுக்கு எதிராகத் தனது வர்க்கத்தைப் பலப்படுத்தி, உறுதியான மக்களாட்சியையும், சோசலிசத்தையும், மக்களுக்குப் புகட்டுவது தான்".

—வி. ஐ. லெனின்.

இவ்விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரை ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் பேசும் இனத்தின் தேசிய விடுதலை, தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் விடிவு, தமிழீழ சமுதாயப் புரட்சி ஆகிய இம்மூன்றும், ஒன்றுடனொன்று இணைந்த இலக்குகளாகும். இவ்வியக்கத்தின் புரட்சிகரமான அரசியல் திட்டமானது இம்மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய செயல்திட்டமாக அமைக்கப்பட்டுத், தமிழ்த்தேசிய-இனத்தின் சிக்கலைச் சமுதாய விஞ்ஞான அரசியல் வேலைத் திட்டத்தில் அணுகிப் பாராளுமன்றத்திற்குப் புறம்பான ஒரு புரட்சித் திட்டத்தை வகுத்துத் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துதலே யாகும்.

தமிழீழ விடுதலை எழுச்சி முற்போக்கானது என்பதால், ஒடுக்குமுறைக் கெதிரான கிளர்ச்சி என்பதால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் பழமைவாத நடுத்தர வர்க்கத்தின் அபிலாசைகளைக் கொண்டதாயினும், அதற்குக் கால வரம்புக்குட்பட்ட ஆதரவளிக்கப் பொதுவுடைமை விடுதலை வாதிகளான நாம் கடமைப்பட்டுள்ளோம். கால வரம்புக்குட்பட்டு ஆதரவளிக்கும் அதே வேளையில், தமிழ்பேசும் பாட்டாளி வர்க்கத்தின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தி, முதலாளி வர்க்கத்திற் கெதிராக அதனைப் பலப்படுத்தித் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமைப் பீடத்திற்குக் கொண்டு வருவதே பொதுவுடைமை விடுதலை வாதிகளான எமது வேலைத்திட்டமாகும்.

இந்தக் கொள்கைக்காக, ஒருபுதிய அரசியற்கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டிய தொல்லையும், தேவையும் எமது கொள்கைக்கு ஏற்றதல்ல. எமக்குப் பாராளுமன்ற அரசியல் இயக்கங்களில் அக்கறையில்லை. தமிழ்பேசும் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிப் பாதையிற் கொண்டு செல்வதற்குப் பாராளுமன்றத்திற்குப் புறம்பான பலம் வாய்ந்த ஒரு புரட்சிவாத தேசிய விடுதலை இயக்கமாக இயங்கும் எம்முடன், பொதுவுடைமை வாதிகள் இணைய முன்வரவேண்டும். இப்படி இணைந்து ஒரே அமைப்பின்கீழ், ஒரே வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், அரசியல் வாதிகளின் நிலைமையை முற்றிலும் மாற்றிக் கொண்டு, எமது இயக்கத்திற்கு மறைமுகமாக இன்றேல் வெளிப்படையாக ஒத்துழைப்புத்தரவோ, இன்றேல் எம்மை வழிநடத்திச் செல்லவோ, வைக்கமுடியும் என்ற நம்பிக்கையுடையவராவோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் புரட்சி அரசியல் நோக்கமானது தமிழீழ மக்களின் ஆழமான உள்ளுணர்வாகிய சிங்கள இனவெறிக் காட்டு விலங்காண்டி மேலாதிக்க வல்லாண்மை ஒடுக்கு முறையிலிருந்து அரசியல் தன்னுரிமை பெறுவதேயாகும். விடுதலை இயக்கம் என்ற முறையில் விடுதலைப் புலிகள் சமுதாயப் புரட்சியையும், தேசிய விழிப்புணர்ச்சியையும் தமிழ் ஈழத்தில் உருவாக்க உறுதியெடுத்துக் கொண்டனர். விடுதலைப்புலி இயக்கத்தின் அடிப்படையான நோக்குகள்:—

தமிழ் ஈழம் முழுத்தன்னுரிமை பெறுதல்;

பொதுவுடைமைச் சமுதாய உற்பத்தி;

சமுதாயப் பொருளாதாரத் திட்டம்;

இப்புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தை, வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் படைக்கலப் புரட்சி முறையை உறுதியாக மேற்கொண்டுள்ளனர். முடிவாகப் பாட்டாளி

மக்களை ஒன்று திரட்டி, ஆளும் சிங்கள அரசியந்திரத்தை அழிக்க முன் நடத்திச் செல்வதே எமது அரசியல் நோக்கமாகும். விடுதலைப்புலிகள் அரச உடைமைகள் மீதும், அரசியல் துரோகிகள் (காட்டிக்கொடுப்பவர்) மீதும் நடாத்திய தாக்குதல்கள் போலவே, இப்புலிகளை எதிர்த்த காவற் படையினர்மீதும் உறுதியான துணிகரத் தாக்குதல்களை நடாத்தினர். அதன் விளைவாக, இப்புலிகளுக் கேற்பட்ட சோதனைகளையும், வேதனைகளையும் நாம் கூறாமலே நீங்கள் செய்தித்தாள்கள் மூலம் அறிந்து கொண்டிருக்கின்றீர்கள்,

"எட்டப்பன் அந்நியனுக்கு உளவு சொல்கிறான் என அறிந்தும், அந்நியனுக்கு ஆதரவாகத் தன்னவனுக்குப் போலிப்புத்திமதி சொல்ல வேற்றுருவில் வந்து அகப்பட்டபின்னரும், மன்னித்துத் தனது பெருந்தன்மையைக் காட்ட முற்பட்டதால், வீர வரலாறு படைத்த வீரபாண்டிய-கட்டபொம்மன் தூக்கிற்றொங்கியது மட்டுமல்லாமல், தமது மக்களையும் அந்நியனுக்கு அடிமை யாக்கிச் செத்து மடிந்தான்".

"அந்நியனுக்குத் தன்னைக்காட்டிக் கொடுப்பான் என்றறிந்தும், தன்னினத்தவன் என்ப தற்காக "காக்கை வன்னியனை" உயிருடன் வாழ விட்டதால் விடுதலை வீரன் பண்டார வன்னியன், வஞ்சகமாக காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டது மட்டுமின்றி, ஈழத்தமிழினமும் அந்நியனுக்கு மீளா அடிமைப்பட்டது".

அன்புத் தோழர்களே! துரோகிகளையும் காட்டிக் கொடுப்பவர்களையும் வாழவிட்டு நாமும் அழியத்தான் வேண்டுமா?... இனத்தைக் காட்டிக்கொடுக்கும் ஓரிரு தமிழர்களினால் தமிழினம் ஈனத் தனமாகச் சிங்கள இன ஒடுக்கல்வாதிகளினால் அழிக்கப்படும் நிலை ஏற்படும். இந்நிலையிலிருந்து தமிழினம் தப்பிப்பிழைக்க, காட்டிக்கொடுக்கும் தமிழர்களையும் எதிர்த்துப்போராட வேண்டிய துயர நிலைக்கு விடுதலைப்புலிகள் உந்தப்பட்டுள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் சமுதாய (சோசலிச) அமைப்புமுறை நாடுகளுடனும், அனைத் துலக உழைக்கும் வகுப்பினருடனும், உலகத்தேசிய விடுதலையியக்கங்களுடனும், மேலாதிக்க எதிர்ப்புச் சக்திகளுடனும் இணைப்பு வைத்துக்கொள்ளும். இவ்வியக்கம், உலக நாடுகளின் விடுதலை இயக்கங் களுடன் தங்களுடைய உறுதியான ஒருமைப்பாட்டினை நல்கி, மேலாதிக்கம், புதிய குடியேற்ற ஆதிக்கம் போன்ற அடக்குமுறைகளை எதிர்த்துப் போரிட விரும்புகிறது.

இப்புரட்சித் திட்டத்தை வென்றெடுத்துத் **தமிழ் ஈழம்** அமைக்க, எந்தவகைச் சோதனை களையும், வேதனைகளையும் தாங்கிக்கொள்ளும் ஏற்றமிகு, எழில்மிக்க ஈழம்வாழ் புரட்சித் தமிழர்களையும், உலகநாடுகளிலுள்ள பொதுவுடைமைத் தமிழர்களையும், விடுதலைப் புலியியக்கத்தில் சேருமாறும் உதவிகள் புரியுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

"வாதாடி வீழ்வதைவிட்டுப் போராடி வாழ்வோம்".

பத்துத்தடவை பாடை வராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா!
செத்து மடிதல் ஒரேயொரு முறைதான்
சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா!
முத்தமிழோடு மோதினார் பகைவர்
முடங்கிக் கிடப்பதென்ன நீதி?
குத்துக் கணைகள் குண்டுகள் வரட்டும்!
குருதி பெய்யடா கொட்டு முரசே!

அடச்சீ! என்னடா அடங்கி நின்றனை!
சோற்றுப் பானையும் நாமும் ஒன்றோ?
சும்மா வயிறு நிரப்பவோ வந்தோம்?
மாற்று வீரன் மருள, தமிழன் — மானப்
போர் செய்திட மாட்டானோ?
நாற்றிசையும் நடுங்க எழடா!
நடந்துபார் செங்குருதி நடுவே!

அன்னைத் தமிழோ அழுது கிடந்தாள்
அருந்தமிழ் நாடோ அழுந்திக் கிடந்தது
முன்னை சேரசோழ பாண்டியர் மூச்சு முடிந்து போச்சோ?
தமிழா, உன்னைத் தமிழ்த்தாய் பெற்றாள் — ஊட்டி
வளர்த்த முலைப்பால் எங்கடா?
தென்னைக் குலைகள் என்னப் பகைவர்
சென்னி திருகடா தெருவில் எழுகவே!

விடுதலை என்ன மலிவு விலையோ?
வீதிக் கடையில் விற்பனைக் குண்டோ?
புடலங்காயோ விடுதலை? போடா!
போர்க்கள மாடப் போ!
கொடுவிலையாக உன் குருதியும் ஆவியும்
கொடடா உன்தலை! கொள்க விடுதலை!

உணர்ச்சிக் கவிஞர்
—காசி. ஆனந்தன்.

